# வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்

# UYEGP

## தமிழ்நாடு அரசு

## தொழில் வணிகத் துறை

சமுதாயம் மற்றும் பொருளாதார ரீதியில் நலிவுற்ற பின் தங்கிய குறிப்பாக படித்த வேலையில்லாத இளைஞர்கள் உற்பத்தி / சேவை / வியாபாரம் போன்ற பிரிவுகளில் அதிக பட்சம் முறையே ரூ. 5 லட்சம், ரூ. 3 லட்சம் மற்றும் ரூ. 1 லட்சம் திட்ட மதிப்பில் சுய தொழில்கள் தொடங்க 15 விழுக்காடு மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் உதவி பெற துறை மூலம் அரசு ஆணை (வேலையற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்) அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரகம் மற்றும் நகர்புறம் ஆகிய பகுதிகளில் விண்ணப்பம் செய்ய கீழ்க்கண்ட தகுதிகள் இருக்கப்பட வேண்டும்.

### தகுதி

- குறைந்த பட்சம் 18 வயது நிறைந்த தனி நபர் பொது பிரிவினர்க்கு 35 வயதும் மற்றும் சிறப்புப் பிரிவினருக்கு 45 வயதும் ஆகும்.
- குறைந்த பட்சம் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் 3 ஆண்டுகளுக்கு குறையாமல் அப்பகுதியில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ. 1,50,000/- க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

### பயனாளிகளின் தெரிவு

மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவினால் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார ரீதியில் செயல்படத்தக்க திட்டங்களுக்கு வங்கியாளர்கள் மூலம் நிதி ஒப்புதல் வழங்கப்படும்.

### வங்கி கடன் தொகை

திட்ட மதிப்பீட்டில் 90 முதல் 95 விழுக்காடு வங்கிக்கடன் ஒப்புதல் மற்றும் பட்டுவாடா செய்யப்படும். (15 விழுக்காடு அரசு மானியம் அதில் அடங்கும்)

### பயனாளிகளின் தன் முதலீடு

பொது பிரிவினர் 10 விழுக்காடும் மற்றும் சிறப்பு பிரிவினர் 5 விழுக்காடும் தன் முதலீடு செலுத்த வேண்டும். (பட்டியலிடப்பட்ட வகுப்பை சார்ந்தவர்கள் பழங்குடியினர், பின் தங்கிய வகுப்பினர், மிகவும் பின் தங்கிய வகுப்பினர், சிறுபான்மையினர், மகளிர், முன்னாள் படை வீரர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர் ஆகியோர் சிறப்பு பிரிவில் இடம் பெறுவர்)

### திரும்ப செலுத்தும் கால தவணை

கடன் தவணை உரிமை அளிக்கப்பட்ட 6 மாதம் அல்லது உற்பத்தி துவங்கிய நாள் இவற்றில் எது முந்தையதோ அந்நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் கடனை வங்கிக்கு திருப்பி செலுத்தல் வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை

பயனாளிகள் உரிய விண்ணப்பப்படிவம் இரண்டு நகல்களில் மேற்கண்ட இணைப்புகளுடன் மாவட்டத் தொழில் மையம் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**பொது மேலாளர்**
மாவட்ட தொழில் மையம், அழகர் கோவில் ரோடு, மதுரை-625 002.
தொலைபேசி எண் : 2537621